# அலகு - 2

- சிந்துவெளி அகழ்வாராய்ச்சி
- பண்டைத் தமிழர் அயல்நாட்டுத் தொடர்புகள்

## • சிந்துவெளி அகழ்வாராய்ச்சி

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும்போது வடமேற்கு இந்தியாவிலும், வட இந்தியாவிலும் திராவிட இன மக்கள் வாழ்ந்திருந்தனர் என்று கருதும் ஆய்வாளர்களுள் பர்ரோவும் ஒருவர் - ரிக்வேதத்தில் 20 திராவிடமொழிச் சொற்கள் ஆளப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். லஹோவரி - பல மொழிகளை ஆராய்ந்து ஒப்புநோக்கி திராவிட மொழிக்கும் ஸ்பெயின் நாட்டு பாஸ்க் மக்களின் மொழிக்குமிடையே ஒற்றுமை பல கண்டார் - சுமேரிய, எலாமைட், கப்படோசிய மொழிகளும் இக்குடும்பத்தின் பாற்பட்டவையே என்றார் - சமயம், சடங்குகளிலும் தொடர்புண்டு என்றார்.

திராவிடர்கள் மேற்காசியாவினின்றும் குடிபெயர்ந்து ஈரான் வழியாக வடமேற்குக் கணவாய்களின் மூலம் சிந்துச்சமவெளியில் குடியமர்ந்திருக்கலாம் அக்காரணத்தினாலோ அங்கிருந்து கொண்டு தமிழகத்தில் தங்கி நாகரிகத்தை வளர்த்திருக்கக்கூடும்.

தமிழர் யார்? என்பதில் முனைப்போடு ஆய்ந்தவர் ஹீராஸ் பாதிரியார். சிந்துவெளியின் புதைபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. ஹரப்பா, மொகஞ்சதாரோ என்ற இரு நகரங்கள் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டன. இவை தற்போது பாகிஸ்தானில் உள்ளன - ஹைதரா சான்ஹுதாரோ, கோட்டிஜி, லோதால், காளிபங்கன் என்ற இடங்களிலும் புதைபொருட்கள் மற்றும் கிடைத்துள்ளன - சர் ஜான் மார்சல் சிந்துவெளி ஆய்வை முனைப்போடு செய்தார் -

மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் உயரக்கப் புகழ்ந்த கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டிருந்தன - அதற்குள் மன்னரின் மாளிகைகள் - நீராடும் குளங்கள் - நேரான சாலைகள் - பெரிய வீடுகள் - நெற்களஞ்சியங்கள் அமைக்கப்பட்டிருந்தன - அயல்நாட்டு வாணிகம் நடைபெற்றுள்ளது - மண்பாண்டங்கள், வெண்கலச் சிலைகள் - களிமண் முத்திரைகள் - செப்பேடுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன - அவையெந்த மொழிக்குடும்பம் திருத்தமாகத் தெரியவில்லை. செப்பேடுகளில் ஒருவரி வலம் - இடமாகவும், அடுத்தவரி இடம் வலமாகவும் செல்லுகின்றன.

சிந்துவெளியின் சித்திர எழுத்துக்கள் பண்டைய தமிழ் வடிவமே என்கின்றனர். ஹீராஸ் பாதிரியார் போன்றோர். இந்நாளைய ஆய்வுகள் இக்கொள்கையை மெய்ப்பிப்பதாக அமைகின்றன.

ரஷ்யா, பின்லாந்து ஆய்வாளர்கள் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

ஐ. மகாதேவனின் சான்றுகள்

1. மொகஞ்சதாரோ முத்திரைகளின் மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளுக்கும் கி.மு. இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுத் தமிழ் பிராமி எழுத்துகளுக்குமிடையே பல இயைபுகள் காணப்படுகின்றன. இவை கடவுள் பற்றிக் குறிக்கும் எண்ணப்பாங்குகளாகவே அமைந்தன.
2. தென்னிந்தியப் பெருங்கற்புதைவுகளின் இடைத்தோண்டிய பானையோடுகளின் மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் சிந்துவெளி ஓடுகளின் கீற்றோவியங்களும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன.
3. சிந்துவெளி முத்திரைகளின் மேல் மக்களின் இயற்பெயர்களும், சிறப்புப்பெயர்களும் எழுதப்பட்டுள்ளன.
4. அரசியல் ஒற்றுமை ஒரே மாதிரியாக உள்ளன.
5. ஊர்ப்பெயர் முன் அமைதல் - சிந்துவெளி - சங்ககாலத் தமிழ் மரபு
6. சாதக இலக்கியம் புராணக் கதைகளுக்கும், சிந்துவெளி முத்திரைகளின்மேல் பொறிக்கப்பட்டுள்ள சித்திரக்காட்சிகள் சிலவற்றுக்குமிடையே ஒற்றுமை காணப்படுகின்றது.

எஸ். ராவ் ஆய்வு

1. குஜராத் மாநிலத்தில் புதையுண்டிருந்த 'லோதால்' என்ற பழைய துறைமுகப் பட்டினத்தை ஆய்ந்து அதற்கும் மொகஞ்சதாரோ நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்றார்.
2. சிந்துவெளி நாகரிகம் குஜராத் பரவியிருந்த உண்மையைக் கண்டவர்.
3. சிந்துவெளி மக்கள் தம்மொழியின் தொடக்கத்தில் ஏறக்குறைய 300 குறிகளைப் பயன்படுத்தினர். காலப்போக்கில் கி.மு 1900 - 1800 அளவில் 20 எழுத்துகளே எஞ்சி நின்றன எனில் இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்துடனேயே தொடர்பு என்றார் - திராவிட மொழிக்குடும்பத்தோடு தொடர்பில்லை என்ற புதிய நிலைப்பாட்டைத் தந்தவர்.

இவர் கருத்து உடன்பாடற்றது - ஆராயத்தக்கது என்கிறார் கே.கே. பிள்ளை

- சிந்துவெளி முத்திரைகளில் இலிங்க உருவங்கள் - இது இலிங்க வழிபாடு உடையவர்கள் எனக்காட்டுகிறது -
- வேதகால ஆரியர்கள் இலிங்கவழிபாட்டை இகழ்ந்தவர்கள்.
- சிந்துவெளி மனிதனின் தலையின் வடிவ அமைப்புக்கும் - ஆரியனின் தலையின் வடிவ அமைப்புக்கும் எவ்விதமான இயைபும் காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும்.
- சிந்துவெளி மக்கள் வானநூலையும், சோதிட நூலையும் பயின்றவர்களாகக் காணப்படுகின்றனர் - அவர்களின் பெயர்களுடன் விண்மீன்களின் பெயர்களும் இணைந்திருந்தன.

மத்தியதரைக் கடற்பகுதி மக்களும், சிந்துவெளி மக்களைப்போலவே பல தொகுதியாகப் பல காலங்களில் தென்னிந்தியாவிற்குள் வந்து குடியேறியவர்களாம் - அவர்கள் வடமேற்கு இந்தியா, சிந்துவெளி, கங்கைவெளி ஆகியவற்றின் வழியாகத்தான் தமிழகத்திற்கு வந்திருக்கலாம். மேலைக்கடற்கரையில் குடியேறினார் எனக் கருதலாம் - பொதுவாக சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழருக்கும் தொடர்பு இருந்ததனையே கருதலாம் என்கிறார் டாக்டர் கே. கே. பிள்ளை

## வினாக்கள்

1. சிந்துவெளியும் குமரிக்கண்டமும் தமிழ்நாட்டுடன் கொண்ட தொடர்பை விளக்குக.
2. சிந்துவெளி ஆய்வுகள் பற்றி விவரிக்க.
3. சிந்துவெளி - தமிழ் நாகரிக ஒற்றுமை குறித்த ஐ. மகாதேவனின் கருத்துக்களை விளக்குக.
4. சிந்துவெளி குறித்து 'ராவ்' தரும் மாறுபட்ட ஆய்வுக் கருத்துக்களை எழுதுக.
5. சிந்துவெளி ஆய்வு குறித்து கே. கே. பிள்ளை தரும் முடிவுகளை விளக்குக.

குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட காலம்

குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட செய்தி,

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

சிலப் : 11:19–20

எனச் சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டுள்ளது.

மாடலன் குமரியாற்றில் நீராடியது பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆனால் நூலின் இறுதியில் வைத்து எழுதப்படும் பாயிரத்தில் குமரி என்பது கடலாகக் குறிக்கப்படுகிறது. இவ்விடைப் பட்ட காலப்பகுதியில் குமரியாறு கடல்கொள்ளப் பட்டிருக்கலாம் என்பர் பேராசிரியர்.

# 5

# தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிக, பண்பாட்டுத் தொடர்புகள்

தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பை, தொடர்பு கொண்ட நாடுகளின் அடிப்படையில் மேலை நாடுகளுடன் கொண்ட தொடர்பு, கீழை நாடுகளுடன் கொண்ட தொடர்பு என இருவகையாகப் பகுக்கலாம். தமிழகத்துடன் வாணிகத் தொடர்பு கொண்ட மேலை நாடுகளுள் கிரேக்கம், உரோமம், எகிப்து, பாபிலோனியா, அரேபியா, சுமேரியா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கீழைநாடுகளுள் சீனம், மலேசியா, சாவகம், வடபோர்னியா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சேரநாட்டுத் துறைமுகங்களுள் முசிறியும், சோழநாட்டுத் துறைமுகங்களுள் காவிரிப்பூம்பட்டினமும், பாண்டியநாட்டுத் துறைமுகங்களுள் கொற்கையும் அயல்நாட்டு வாணிகத் தொடர்பில் சிறந்த பங்கேற்றன. முசிறியில் மிளகும், கொற்கையில் முத்தும், காவிரிப்பூம்பட்டினத்தில் துகிலும் அகிலும் சந்தனமும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் குறிப்பிடத்தக்கவை. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் நான்கில் மூன்று பங்கு மிளகு என்பர் டாக்டர் சு. வித்தியானந்தன். அயல் நாடுகளில் இம்மிளகு உணவைப் பாதுகாக்கவும் மருந்து செய்யவும் பயன்படுத்தப்பட்டது. கிரேக்க வல்லுநர் கிப்பாகிரேட்டசு மிளகை, 'இந்திய மருந்து', என்ற பெயரால் அழைப்பர்.

## அயல்நாட்டுத் தொடர்பை நிறுவும் அகப்புறச் சான்றுகள்

1. **புறச் சான்றுகள்:** ஹெரோடோடஸ் என்ற கிரேக்க வரலாற்றாசிரியரும் ஹிப்பாக்கிரேட்டசு என்ற கிரேக்க மருத்துவ

வல்லுநரும் ஸ்டிராபோ என்ற உரோமப் புவியியல் ஆசிரியரும் பழந்தமிழகம் கிரேக்க உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பைக் குறிப்பிடுகின்றனர்.

பிற்காலத் தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பை அரேபிய வரலாற்று ஆசிரியர்ரான வாசப், வெனிஸ் பயணியான மார்க்கபோலோ, மூர்ப்பயணியான இபின்பதூதா ஆகியோர் எடுத்துரைக்கின்றனர்.

'எரித்திரியக் கடலின் பெரிப்புளூசு' என்ற வரலாற்று நூல் ஸ்காப் என்பவரால் கி.பி. 60-இல் பதிப்பிக்கப்பட்டது. பிளைனியின் "இயற்கை வரலாறு" என்ற உயிரியல் நூல் கி.பி. 77-இல் எழுதப்பட்டது. தாலமியின் "பூகோள விளக்கம்" என்ற புவியியல் நூல் கி.பி. 140-இல் எழுதப்பட்டது. இந்நூல்கள் தமிழகத்தின் வாணிகச் சிறப்பை விளக்கி உரைக்கின்றன.

பெரிப்புளூசு என்ற நூலில் காவிரிப்பூம்பட்டினம், குமரி, கொற்கை, தொண்டி, நாகபட்டினம், புதுச்சேரி, முசிறி ஆகிய தமிழகத் துறைமுகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பட்டு, மிளகு, முத்து, இரத்தினம், யானைத்தந்தங்கள் ஆகியவை முசிறியில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன எனவும் அந்நூல் குறிப்பிடுகிறது. பாண்டிய நாட்டில் முத்துக்குளிக்கும் தொழிலை ஆயுள் தண்டனை பெற்ற குற்றவாளிகள் மேற்கொண்டிருந்தனர் எனப் பெரிப்புளூசு என்ற நூலும், செங்கடல் செலவு என்ற நூலும் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்களிலோ, பிறதமிழ் இலக்கியங்களிலோ இக்குறிப்பு இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கொல்கி எனத் தமிழகத் துறைமுகப்பட்டினம் ஒன்றைப் பெரிப்புளூசு குறிப்பிடுகிறது. சங்க நூல்கள் சுட்டும் கொற்கையே இது என்பர் ஸோஃப் (Schoff)

கி.பி. 140-இல் வாழ்ந்த தாலமி சோழநாட்டின் உள்நாட்டுப் பட்டணங்களாக மாகூர், கர்மாரம் ஆகிய நகரங்களைக் குறிப்பிடுவர். அவை முறையே பழையன் ஆண்ட மோகூரும் கரிகாலன் சோழப் பேரரசுடன் இணைத்த கழுமலமும் ஆக இருக்கலாம் என்பர் சிவராசப்பிள்ளை. கரூரா என்ற நகரைச் சேரநாட்டின் தலைநகராகத் தாலமி குறிப்பிடுவர். அது சேரநாட்டின் கருவூராக இருக்கலாம் என்பர் கால்டுவெல். தாலமி குறிப்பிடும் காபேரிசு சோழரது துறைமுகப்பட்டினமான காவிரிப் பூம்பட்டினமாக இருக்கலாம் என்பர் டாக்டர் பெர்னல்.

கவி, தோகை என்ற தமிழ்ச் சொற்கள் ஹீப்ரு மொழியில் கபி, துகி என மருவி வழங்கப்படுகின்றன. இஞ்சிவேர், கருவாப்பட்டை ஆகிய சொற்கள் ஜிஞ்ஜிபர், கற்பியன் எனத்திரிந்து வழங்கப்படுகின்றன. தமிழகத்திற்கும் மேற்காசியாவிற்கும் இடைப்பட்ட வாணிக வளத்தை இச்சொல் பரிமாற்றங்கள் அரண் செய்கின்றன எனலாம்.

2. **அகச் சான்றுகள்:** தமிழ் இலக்கியங்களில் பெருங்கடலில் ஓடும் கலம் நாவாய் எனவும், பெருங்கப்பல்கள் வங்கம் எனவும் அழைக்கப் படுகின்றன. கலங்கள் கரைசேரத் துணையாகக் கடற்கரைப் பட்டினங்களில் கலங்கரை விளக்கம் நிறுவப்பட்டிருந்தமை பற்றிப் பெரும் பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. ஏற்றுமதி, இறக்குமதிக்கெனக் குவிக்கப் பட்டுள்ள பொருள்கள் அரசு பண்டகசாலையில் முத்திரையிட்ட பின்னரே வெளிச்செல்ல அனுமதிக்கப் பெற்றமை பற்றிப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. ஏற்றுமதிக்கெனக் குவிந்துகிடந்த பொருள்களுக்குத் தீர்வை விதிப்பதற்கெனத் தனி அலுவலர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைச் சேமித்து வைக்கக் காப்பகங்கள் அரசு பொறுப்பில் இயங்கின.

பூம்புகாரில் விற்பனைக்கு வைத்திருந்த பொருள்களை அடியார்க்கு நல்லார் தம் உரையில் சுட்டிக்காட்டுகிறார். அவற்றுள் அகில், ஆரம், கர்ப்பூரம், துகில், வாசனைப் பொருள்கள் ஆகிய பொருள்குவியல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழகம் ஏற்றுமதி செய்த வாணிகப் பொருள்களின் பட்டியலில் அகில், அரிசி, ஆடைகள், ஆரம், இஞ்சி, இலவங்கம், ஏலம், கருங்காலி, மயில், மிளகு, முத்து ஆகியன சிறப்பிடம் பெற்றிருந்தன. தமிழகக் கப்பல்கள் பொருளை விற்றுப் பொன்னுடன் திரும்பி வருதலை,

பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடு ஆர நன்கு இழிதரும்
ஆடியல் பெருநாவாய் — மதுரைக்காஞ்சி - 81-83

என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. யவனர் கப்பல்கள் பொன்னொடு வந்து மிளகொடு திரும்பிச் செல்லுதலை

யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி — அகநானூறு - 149

என அகநானூறு குறிப்பிடுகிறது. தமிழக வாணிகர்கள் அறநெறி பிழையாமல் வாணிகம் செய்தனர் எனப் பட்டினப்பாலை சுட்டுகிறது.

நடுவுநின்ற நன்னெஞ்சினர்
வடுவு அஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும் — பட்டினப்பாலை 206-210

நடுவுநிலைமை, பொய்யாமை, குறைந்த ஆதாயம், குற்றம் செய்ய அஞ்சுதல் ஆகிய நேரிய உணர்வுகள் வாணிகத்திற்கு அடிப்படையாக விளங்கியமை காண்கிறோம்.

கிரேக்கர்களையும் உரோமர்களையும் தமிழ் இலக்கியங்கள் யவனர் எனப் பெயரிட்டு அழைக்கக் காண்கிறோம். அவர்களுக்கெனத் தனி இருப்பிடங்கள் தமிழகத்தில் இருந்தன. அது 'யவனச் சேரி' எனச் சிலம்பில் அழைக்கப்படுகிறது. தமிழ் மன்னர்கள் அவர்களைக் காவல் துறையில் ஈடுபடுத்தினர்.

கடிமதில் வாயில் காவலில் சிறந்த
அடல் வாள் யவனர்
- சிலப்பதிகாரம் 14: 66-67

எனச் சிலம்பில் யவனரின் காவல் சிறப்புப் புகழப்படுகிறது.

வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
- முல்லைப்பாட்டு - 61

என அவரது உடல் வலிமை முல்லைப்பாட்டில் புகழப்படுகிறது. யவனர் செய்த நன்கலன்களைப் பற்றிப் புறநானூறும் (56) அவர்கள் செய்த மகரவீணை, பாவை விளக்கு, நகைகள் ஆகியன பற்றிப் பெருங்கதையும் குறிப்பிடுகின்றன. யவனத் தச்சர்கள் தமிழகத்தில் பணிபுரிந்ததை மணிமேகலை (19:108) எடுத்துரைக்கிறது'

## 'பழைய ஏற்பாட்டில்' தமிழ்ச்சொற்கள்

தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பு மிகவும் பழமையுடையது. கி.மு. 1490-இலேயே இறைவழிபாட்டில் ஏலக்காய் பயன்படுத்தப்பட்ட செய்தியை பழைய ஏற்பாடு (Old Testament) சுட்டுகிறது. கி.மு.1000இல் தென் அரேபிய நாட்டு அரசி ஷீபா, இஸ்ரேல் நாட்டு மன்னன் சாலமனுக்கு ஏலம், இலவங்கம் ஆகிய நறுமணப்பொருட்களைக் கையுறையாகத் தந்ததாக அந்நூல் மேலும் குறிப்பிடுகிறது. சாலமனுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சந்தனமரம், தந்தம், பொன், வெள்ளி, வாலில்லாக்குரங்கு ஆகியன தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக அறிகிறோம்.

## தமிழகம் சுமேரியாவுடன் கொண்ட வாணிகத்தொடர்பு

சுமேரியாவின் தலைநகரமான 'உர்' என்ற இடத்தில் சந்திரனுக்குக் கட்டப்பட்ட கோவிலின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அச்சிதைவுகளில் தமிழகத்தின் தேக்கு மரத்துண்டு ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. அதன் வயதைக் கி.மு. 4000 என மதிப்பிடுவர் சாய்ஸ்.

## எகிப்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு

தமிழ்நாட்டுப் பொருள்களின் இறக்குமதிக் களங்களாக எகிப்தின் அலெக்சாண்டிரியா, சோமாலிலாந்து ஆகியன விளங்கின. எகிப்திலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதியான பொருள்களுள் பொன் இழைகளால் ஆன ஆடைகள், கண்ணாடிப் பொருள்கள், அத்தர் ஆகியன குறிப்பிடத்தக்கவை. தமிழகத்திலிருந்து சென்ற அரிசி, கருங்காலி, தந்தம், நறுமணப்பொருள்கள், நூலாடை ஆகியன எகிப்து அரசர்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டன. எகிப்தில் உள்ள கி.மு.15ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில்

இலவங்கப்பட்டை குறிக்கப்பட்டுள்ளது. எகிப்தில் உள்ள 'மெம்பிஸ்' -இன் புதைபொருள் சிதைவுகளில் இந்தியரின் ஓவியங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதைக் கந்தையாபிள்ளை சுட்டிக் காட்டுவர்.

சுமேரியாவுடன் கொண்ட தொடர்பு போன்றே தமிழகம் எகிப்துடன் கொண்ட தொடர்பும் மிகப் பழமையானது. தமிழகமும் எகிப்தும் கொண்ட வாணிகத் தொடர்பின் பழமை பற்றிப் பெரிப்புளூசு நூலின் பதிப்பாசிரியர் ஸ்காப் தனது பதிப்புரையில், கிரேக்க மக்கள் அநாகரிகத்திலிருந்து விழித்து எழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பே, எகிப்தும் தமிழகமும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

## அரேபியாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

அரேபியர் தமிழகத்திலிருந்து இஞ்சி, இலவங்கம், ஏலம், குரங்கு, சந்தனம், தந்தம், தேக்கு, பூந்துகில், மிளகு, முத்து ஆகியனவற்றை ஏடன் துறைமுகத்தில் பெற்று ஆப்ரிக்காவுக்கு விற்பனை செய்ததாக அறிகிறோம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சிரியா, எகிப்து, பர்சியா ஆகிய நாடுகளை அரேபியர் வென்றபோது அரேபியருடன் தமிழகம் கொண்ட வாணிகத் தொடர்பு புத்துயிர் பெற்றது. அரபுநாட்டுக் குதிரைகள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. தமிழகம் ஆண்டுதோறும் அரேபியாவிலிருந்து 10,000 குதிரைகளை வாங்கியதாக வாசப் குறிப்பிடுவர். "குதிரை வளர்க்கும் கலையைத் தமிழர்கள் அறியாததால் இவ்வாணிகத்தால் தமிழகத்திற்குப் பெரும் இழப்பு நேரிட்டது" என மார்க்கபோலோவும் வாசப்பும் குறிப்பிடுகின்றனர்.

## பாபிலோனியாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

அரிசி, சந்தனம், மயில் போன்றவை தமிழகத்தில் இருந்து பாபிலோனியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டன. இப்பொருள்கள் அம்மொழியில் தூய திராவிடமொழிப் பெயரைக் கொண்டுள்ளமை காண்கிறோம். "கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் பாபிலோனில் கடல் வழியாக இறக்குமதியான புதிய பொருள் ஒவ்வொன்றும் வடமொழியில்லாத திராவிடப் பெயரையே பெற்றுள்ளன" என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத்தக்கது. பாபிலோனியர் தமிழ் வாணிகருடன் கொண்டிருந்த பற்றுவரவுகள் அந்நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ள களிமண் ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழர் கடை ஒன்றன் முகவரி பாபிலோனியக் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளதைச் சீனிவாச ஐயங்கார் 'இந்திய வரலாறு' என்ற நூலில் எடுத்துரைப்பர்.

## கிரேக்கத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு

கி.மு. 538 இல் பாபிலோனியாவுக்கும் கிரேக்கத்திற்கும் இடையே போர் நடைபெற்றது. இப்போரில் கிரேக்கம் வெற்றி பெற்றது. பாபிலோனியா

நகரம் அழிக்கப்பட்டது. இது கிரேக்கம் தமிழகத்துடன் நேரடியாக வாணிகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியது. பர்சியா வளைகுடா வழியாகப் பாபிலோனியர் நடத்திய வாணிகத்தைக் கிரேக்கர்கள் செங்கடல் வழியாக நடத்தலாயினர். கப்பல்கள் செங்கடலில் இருந்து சேரநாடு வந்து சேர 40 நாட்கள் ஆகின என டாக்டர் ஹெசன் குறிப்பிடுவர்.

கிறித்துவுக்கு முற்பட்ட முதல் ஐந்து நூற்றாண்டுகளில் தமிழகம் ஐரோப்பாவுடன் நடத்திய வாணிகத்தில் கிரேக்கம் சிறந்த பங்கேற்றது. சேரநாட்டுக் கடற்கரையை நோக்கி வீசும் தென்மேற்குப் பருவக்காற்றின் தன்மைகளை ஹிப்பாலஸ் என்ற கிரேக்க மாலுமி கி.பி. 45-இல் கண்டறிந்த பின் இவ்வாணிகம் பெருகியது. இவ்வாணிகக் காற்றின் செவ்வியைத் தமிழ் மன்னர்களும் அறிந்து வைத்திருந்தனர் என்பதை,

> நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
> வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
>
> - புறநானூறு - 66

என்ற புறநானூற்றுப் பாடலால் உணரலாம். கிரேக்கர்களும் அரேபியரும் அனுப்பிய பொருள்களை ஏந்திக் கொண்டு, கணக்கற்ற கப்பல்கள் முசிறித் துறைமுகத்தில் வந்து நின்றதாகப் பெரிப்புளூசு என்ற நூல் குறிப்பிடுகிறது. இவ்வாணிகப் பெருக்கத்தால் அரிசி, இஞ்சிவேர் போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் இடம்பெறலாயின.

### உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பு

தமிழகம் ஏற்றுமதி செய்த பொருள்களின் பெருமைகளை உரோமர்கள் கிரேக்கர்களின் வாயிலாக முன்னரே அறிந்து வைத்திருந்தனர் எனினும் கி.மு. முதல் நூற்றாண்டு வரை உரோமம் தமிழகத்துடன் கொண்ட வாணிக உறவு பெருகவில்லை. கி.மு. 30-ல் மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடுகள் உரோமப் பேரரசர் அகஸ்டசின் ஆட்சியின் கீழ் வந்தன. இவ்வெற்றியின் காரணமாக உரோமர்கள் தமிழகத்துடன் நேரடியாக வாணிகம் செய்யத் தொடங்கினர்.

இருவர் அடங்கிய பாண்டியநாட்டின் தூதுக்குழு ஒன்று பரிசு பொருள்களுடன் அகஸ்டசின் முடிசூட்டு விழாவிற்கு உரோமம் சென்றதாக அகஸ்டசின் குறிப்பால் அறிகிறோம். உரோமப் பேரரசுடன் நடைப்பெற்ற வாணிகத்தில் மிளகும் முத்தும் முதலிடம் பெற்றன. மிளகு உரோமர்களால் 'யவனப்பிரியா' என அழைக்கப்பட்டது. மிளகின் இறக்குமதியில் உரோமர்களுக்கு இருந்த ஈடுபாட்டை இது புலப்படுத்தி நிற்கிறது.

நறுமணப் பொருள், மெல்லிய ஆடைகள், தந்தம், கிளி, குரங்கு, மயில், வேட்டை நாய்கள் ஆகியனவும் தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாணிகத்தால் ஆண்டுக்கு நூறாயிரம் உரோமப்

பொன் நாணயங்கள் தமிழகம் வந்தன. கணக்கிறந்த பொன் தமிழகம் செல்வதைத் தடுக்க உரோமப் பேரரசு சட்டம் இயற்றியதாகக் கூறப்படுகிறது. இச்சட்டத்தைக் கொண்டு வந்தவன் கி.பி. 68-இல் மறைந்த நீரோ மன்னன் ஆவான்.

"உரோமபுரி அரசிகளும் செல்வப் பெண்மணிகளும் முத்துக்களைப் பெருமளவில் அணிவதால் பெரும்பொருள் தமிழகம் செல்கிறது" எனவும் "உரோம நாட்டுச் செல்வம் வற்றி வருகிறது" எனவும் கி.பி. 16-இல் 'தி பெரியசு' செனட் சபைக்கு எழுதினார். "உரோமப் பெண்கள் அழகு செய்யப்பயன்படுத்துகின்ற வாசனைப் பொருள்கள் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் உரோம நாட்டின் செல்வம் வீணாக்கப்படுகிறது" எனத் தசித்தசுவும், பிளைனியும் குறிப்பிடுகின்றனர். "கையசு என்னும் பேரரசரின் மனைவி பௌலீனா மட்டும் நான்கு கோடிப் பொன் பெறுமான முத்துக்களால் தன்னை அணி செய்திருந்தாள்" எனப் பிளைனி குறிப்பிடுகின்றார். "தமிழகத்திலிருந்து நேர்த்தியான ஆடைகள் வருவதால் உரோம நாட்டின் செல்வ வெள்ளம் தமிழகம் நோக்கிப் பாய்கிறது" எனப் 'பெற்றோனியஸ்' குறிப்பிடுகிறார். 120 மரக்கலங்கள் தமிழக உரோம வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததை நேரில் கண்டதாக ஸ்டிராபோர்டு குறிப்பிடுகிறார்.

அரிக்கமேடு, கருவூர், மதுரை, வெள்ளலூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள உரோம நாணயங்கள் தமிழகம் உரோமத்துடன் கொண்ட வாணிகத் தொடர்பை அரண் செய்கின்றன எனலாம். இந்தியாவில் கிடைக்கப்பெற்றுள்ள 68 வகை உரோம நாணயங்களுள் பெரும் பாலானவை தமிழகத்தில்தான் கிட்டியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. உரோம வரலாற்று ஏடுகளில் தொண்டி, முசிறி, குமரி, கொற்கை, நாகப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், புதுச்சேரி ஆகிய தமிழகத் துறைமுகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

### சீனாவுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

தமிழகம் சீனத்துடன் மேற்கொண்டிருந்த வாணிகத் தொடர்பு மிகப்பழமையானது. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து சீனத்தில் இறக்குமதியான பொருள்கள் பற்றிச் சீனநாட்டு வரலாறுகள் குறிப்பிடக் காண்கிறோம்.

கி.பி. 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திற்கும் சீனாவுக்கும் இடையே நடைபெற்ற வாணிக உறவு வளம் பெற்றது. சீனத்திலிருந்து ஈயம், செம்பு, நறுமணப்பிசின், பவளம், சீனக் கண்ணாடி, சீனக்களிமண், சீனக்கற்கண்டு, சீனக்காரம், சீனக்கிழங்கு, சீனப்பட்டாடை ஆகிய பொருள்கள் தமிழகத்திற்கு இறக்குமதியாயின. மிளகு, முத்து, நீலம், பாக்கு ஆகியன ஏற்றுமதியாயின. சீனம் என்ற சொல்லுடன் இணைந்து வரும் தமிழ்ச் சொற்கள் தமிழகத்திற்கும் சீனாவுக்கும் இடைப்பட்ட வாணிகத்

தொடர்பை நன்கு விளக்கி நிற்றல் காண்கிறோம். "தமிழகத்தில் இருந்து எகிப்திற்கு ஒரு கப்பல் மிளகு சென்றால் சீனத்திற்கு 100 கப்பல்கள் மிளகு செல்லும்" எனும் மார்க்க போலோவின் குறிப்பு இங்கு நோக்கத்தக்கது. முதலாம் இராசராசன் கி.பி. 1015-இல் சீனாவிற்கு வாணிகத்தூதுக்குழு அனுப்பியதாக அறிகிறோம். தமிழகத்தில் இருந்து பொருள்களின் இறக்குமதி மிகக் கண்ட சீன அரசு அதனைக் கட்டுப்படுத்த இறக்குமதி வரி விதித்ததாகவும் அறிகிறோம்.

## வடநாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பு

சுமேரியா, எகிப்து, கிரேக்கம், அரேபியா, பாபிலோனியா, உரோமம், சீனம் ஆகிய நாட்டுடன் கொண்ட வாணிக உறவு போன்றே வடநாட்டுடன் தமிழகம் கொண்ட வாணிக உறவும் பழமையானதாகும். சந்திரகுப்த மோரியனின் கருவூலத்திற்குத் தமிழகத்தில் இருந்து இரத்தினங்கள், சேரநாட்டு வைடூரியங்கள், பாண்டியநாட்டு மெல்லாடைகள் அனுப்பப்பட்டதாகச் சாணக்கியரின் அர்த்தசாத்திரம் சுட்டுகிறது. பாண்டிய நாட்டு முத்துக்கள் மெகஸ்தனிசால் புகழப்படுகின்றன.

## பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம்

தமிழகம் அயல்நாடுகளுடன் கொண்ட வாணிகத் தொடர்பு பண்பாட்டுத் தொடர்பாகவும் கீழைநாடுகளில் மலர்ந்து நிற்கக் காண்கிறோம். இத்தொடர்பு சமயத்தில் ஏற்படுத்திய தாக்கம் பெரியது.

பர்மாவிலுள்ள பாகன் என்ற ஊரில் தமிழ்க்கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பர்மாவிலுள்ள கோவில்கள் தென் இந்தியச் சிற்பிகளால் கட்டப்பபட்டிருக்க வேண்டும் என்பர் ஸ்காட்.

மலேசியாவில் உள்ள 'வியோங்ஸ்நா' வில் திருமாலின் நின்றகோலச்சிலை ஒன்று உள்ளது. கடாரத்தில் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ள சிதைவுப் பொருள்களுள், சிவன் கோவிலின் சிதைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் அமைப்பு முறை பல்லவரின் கட்டடக்கலையுடன் ஒருமைப்பாடு கொண்டுள்ளது என்பர் குவாரிட்ஜ் வெல்ஸ். மூன்றாம் நந்திவர்மன் கி.பி. 826-50 இல் தமிழகத்தில் ஆட்சி செய்தவன். அவனி நாரண ஏரி ஒன்று அவனது புனைபெயரால் மலேசியாவில் அமைக்கப்பட்டுள்ள செய்தியைத் தாகூபாக் கல்வெட்டுச் சுட்டுகிறது. மலேய மொழியில் இணை, இலை, உறுதிமொழி, மலை, வண்ணான் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் தமிழ்மொழிச் சொற்களின் திரிபுகளே என்பர் மொழியியல் ஆய்வாளர்கள். மலேசியா என்ற சொல்லின் வேர்ச்சொல்லே மலை என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

சுமித்திராவில் உள்ள ஸிம்பிரிங் என்ற இனமக்களின் மொழியில் சோழர், பாண்டியர், பல்லவர், தெக்காணம், மலையாளம் ஆகிய சொற்கள் வழக்கில் உள்ளன.

மணிமேகலையில் ஜாவா, சாவகம் எனவும், சாவகத்தீவகம் எனவும் வழங்கப்படுதல் காண்கிறோம். சீனப்பயணி பாஹியான் கி.பி. 414-இல் அங்குப் பயணம் செய்தார். அப்போது ஜாவாவில் அந்தணர் சமயம் உயர்நிலையில் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். கி.பி. 732 இல் அங்குச் சிவலிங்க வழிபாடு நடைபெற்றமை பற்றியும், கி.பி. 760 இல் அகத்தியர் கோவில் இருந்தமை பற்றியும் ஜாவாவில் உள்ள கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

## அயல்நாட்டு வாணிகத் தொடர்பு உணர்த்தும் ஆய்வு முடிவுகள்

1) தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிக உறவில் இறக்குமதிப் பொருள்களைக் காட்டிலும் ஏற்றுமதிப் பொருள்களே அதிகம். அவற்றுள்ளும் மிளகு, முத்து, வாசனைப் பொருள்கள் ஆகியவையே மிகுதியாக ஏற்றுமதி செய்யபட்டன. ஆனால் கி.பி.13,14 ஆம் நூற்றாண்டில் அரேபியாவுடன் செய்த வாணிகத்தில் இறக்குமதி மிகுந்து நிற்கக் காண்கிறோம்.

2) கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நடைபெற்ற முதலாம் தாலமியின் ஊர்வலத்தில் இந்தியப் பெண்கள் இடம் பெற்றிருந்தனர் எனக் குறிப்பிடப்படுகிறது. கடல் கடந்து பெண்களை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை என்பதை, 'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை' (தொல். பொருள் - 37) எனும் நூற்பா வாயிலாகத் தொல்காப்பியம் வற்புறுத்திக் கூறுகிறது. ஆதலின் அவ்விந்தியப் பெண்களில் தமிழ் மகளிர் இடம்பெறவில்லை எனத் துணியலாம்.

3) தமிழகம் உள்நாட்டில் செய்த வாணிகத்தில் பண்டமாற்றுமுறை வழக்கில் இருந்தது. பண்டமாற்றில் நெல்லுக்குச் சரியாக உப்பு மதிக்கப்பட்டிருந்தது. பரதவர்கள் மீனைத் தந்து நெல்லையும், பயறையும் பண்டமாற்றாகக் கொண்டமை பற்றி ஐங்குறுநூறும், குறவர்கள் கள்ளையும், இறைச்சியையும் தந்து கரும்பைப் பண்டமாற்றாகக் கொண்டது பற்றிப் பொருநராற்றுப் படையும் குறிப்பிடுகின்றன. இதைப் போன்று வெளிநாட்டு வாணிகத்தொடர்பில் பண்டமாற்று முறை இருந்ததா என அறிந்து கொள்ளமுடியவில்லை. பொன் அங்குப் புழங்கப்பட்ட நாணயமாற்றாக (Currency) இருந்திருக்கலாம் என ஊகிக்க இடம் உள்ளது.

4) தமிழர் வாணிகம் கீழை நாட்டின் பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் போன்று மேலை நாட்டுப் பண்பாடுகளில் தாக்கம் ஏற்படுத்தியதற்குச் சான்று இல்லை. அவர்கள் 'வாணிகத்தொடர்பு' என்ற அளவில் இவ்வுறவை நிறுத்திக் கொண்டனர் என்றே கருதத் தோன்றுகிறது.

5) கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முற்பட்ட உரோம நாணயங்கள் தமிழகத்தில் கண்டெடுக்கப்படவில்லை. கிபி. முதல் நூற்றாண்டுக்குப்பின் உரோமாபுரியில் வெளியிடப்பட்ட நாணயங்களும் தமிழகத்தில் கிடைக்கவில்லை. தமிழகத்திற்கும் உரோமத்துக்கும் இடையே வாணிகம் செழித்து வளர்ந்த காலம் இவ்விடைப்பட்ட காலமாகலாம். எனினும் மிளகு தொடர்ந்து ஏற்றுமதியாகி கொண்டிருந்ததாக அறிகிறோம்.

மேலும் தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சி இருந்தது. அவர்கள் தொடக்கத்தில் பௌத்த சமயத்தையும், பின்னர் சமண சமயத்தையும் தழுவி நின்றனர். அதனை அடுத்த காலத்தில் முற்காலப் பல்லவர் ஆண்டனர். அவர்கள் சமண சமயத்தைத் தழுவி நின்றனர். சமணர்கள் கடல் கடந்து செல்வதை ஆதரிக்காதவர்கள். ஆதலின் சமணசமயம் சார்ந்த இவர்களால் அயல்நாட்டு வாணிகம் ஊக்கப்படுத்தப்படாமல் விடப்பட்டிருக்கலாம். கிபி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பின் உரோம நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்கப் பெறாமைக்கு இது காரணம்.